# SUBORDINATE COURT, PADMANABHAPURAM

## CASE NO.SC.250/2023

### Deposition of P.W. 1

Name : திரு. ராஜாங்கபெருமாள்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**01.04.2026**

**A1 to A4 Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது நாகர்கோவிலில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிய போது 15.10.2022ம் தேதி காலை08.00 மணிக்கு நானும், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. செந்தில் சுரேஷ், திரு. டேவிட் ஆகியவர்கள் ரோந்து அலுவலாக சுவாமியார்மடம் ஆர்.சி.சர்ச் சந்திப்பில் வைத்து வாகன சோதனை செய்து கொண்டிருந்த போது KL 21 S 64 கிரே கலர் இன்னோவா வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்ட வாகனத்தில் ஓட்டுனர் மற்றும் அவருடன் வந்த இரண்டு நண்பர்களும் சந்தேகத்திற்கிடமாக பதில்கூறினார்கள். பின்னர் அவர்கள் சரியாக முகாந்திரம் கூறாததால் இருக்கையில் வெள்ளை நிற சாக்கு மூட்டைகள் இருந்தன. இவற்றை

பற்றி கேட்கும் போது வெள்ளை நிற சாக்கு மூட்டைகள் ஒன்றை பிரித்து பார்க்க அதில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட கணேஷ் புகையிலை பாக்கெட்டுகள் தென்பட்டது. அதுபற்றி ஓட்டுனர் மற்றும் அவருடன் இருந்த இருவரிடமும் கேட்க அவர்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியை கூறினார்கள். அதில் ஓட்டுனர் பெயர் அன்வர்தீன் மற்ற நபர்கள் காஜாஉசேன், ஜோஜோ ஆவார்கள். அதில் ஓட்டுனர் அன்வர்தீன் தனக்கு சொந்தமான இனோவா காரில் தனக்கு தெரிந்த களியக்காவிளை, கோழிவிளை ரஷாக் என்பவர் என்னிடம் ஜோஜோ என்று பீமா பள்ளி சசியிடம் வாங்கி தரும் கணேஷ் புகையிலைகள் அதிக விலைக்கு விற்க கொண்டு செல்வதாகவும், நித்திரைவிளையை சேர்ந்த சுனில் அதை சிறுவர்களுக்கு விற்பதற்காக சிறு கடைகளுக்கும், பள்ளிகூடத்திற்கு அருகில் உள்ள கடைகளுக்கும் விற்பனை செய்வார் என்று கூறினார். தன்னிடம் ரூ.2,00,000/- கொடுத்து கணேஷ் புகையிலை வாங்கிவர அனுப்பியதாகவும் மேலும், அவர் தனது உறவினர்காளன காஜாஉசைனை அதிக சம்பளம் தருவதாக கூறி அவரையும் அழைத்து கேரளாவிற்கு சென்று ஜோஜோ மூலமாக சசி என்பவரிம் ரூ.2,00,000/- கொடுத்து மீதம் ரூ.20,000/-த்தை பெற்றுக் கொண்டு தாங்கள் மூவரும் அவருக்கு சொந்தமாக இனோவா வாகனத்தில் புகையிலை ஏற்க்கொண்டு வரும் போது ரஷான் என்பவர் சுவாமியார்மடம் வந்து நானும், சசியும் நிற்பதாகவும் இங்கு வந்து சரக்கை தருமாறு அழைத்ததின் பேரில் தான் வாகனத்துடன் சுவாமியார்மடம் வந்து தமிழக அரசால் தடைச்செய்யப்பட்ட புகையிலை என தெரிந்தும் தாங்கள் மூவரும் வாங்கி கொண்டு வந்த போது தாங்கள் சோதனை செய்து பிடித்து கொண்டதாக கூறினார். வாகனத்தை

.3.

சோதனையிட வாகனத்தில் 18 மூடைகள் கணேஷ் புகையிலை இருந்தது. 50 பாக்கெட்டுகள் வீதம் மொத்தம் 297 கிலோ கணேஷ் புகையிலை இருந்தது. அதனை பொதுமக்கள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்ட்டியாகிய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செந்தில் சுரேஷ், திரு. டேவிட்ராஜ் ஆகியவர்கள் முன்னிலையில் கணேஷ் புகையிலை மூட்டைகளையும், வாகனத்தையும் பணம் ரூ.16,500/-யும் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1. எதிரிகளையும், வழக்குச் சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து 11.30 மணிக்கு நிலைய குற்ற எண். 266/2022 பிரிவுகள் 273, 328 இ.த.ச மற்றும் 6(a) r/w 24(1) COTPA Act படியும் பிரிவு 77 இளஞ்சிறார் நீதிச்சட்டப்படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாகன தணிக்கை ரோந்தை 07.00 மணிக்கு தொடங்கினோம். நான் காவல்நிலையத்திற்கு காலை 06.00 மணிக்கு பணிக்கு வந்தேன். பொதுநாட்குறிப்பில் நான் 06.00 மணிக்கு பணிக்கு வந்த விபரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் நான் அன்றைய தினம் காலை பணிக்கு வந்திருந்தால் பொதுநாட் குறிப்பில் பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது பணியின் போது பயன்படுத்தக்கூடிய டயரியையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ரஷாக் எந்த இடத்திலிருந்து வரச்சொன்னார் என்று குறிப்பிட்டு கூறவில்லை. ரஷாக் உபயோகப்படுத்திய தொலைபேசி எண்ணையும்

குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் நிறைய கடைகளும், வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். ஆனால் பொது மக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. எதிரிகள் சம்பவ இடத்தில் வந்ததை காட்ட புகைப்படமோ, கண்காணிப்பு கேமரா பதிவுகளோ தாக்கல் செய்யவில்லை. எதிரிகளை நான் கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 14.10.2022ம் தேதி எதிரி கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்த போது குடிபோதையில் வந்தவரை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று அடித்து பொய் வழக்கு போடவேண்டும் என்பதற்காக திருவட்டார் காவல்நிலையத்தில் ஒப்படைத்து பொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. 1 கிராம் கணேஷ் புகையிலை 15-லிருந்து 20 கிராம் மட்டுமே இருக்கும் என்றும் 30 கிராம் இருக்காது என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும், வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும்இல்லை என்றால் சரியல்ல

**<u>2, 3வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் தொடர்பாக நான் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. அத்தாட்சியின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தேன். 1வது எதிரி வாய்மொழியாக சொன்ன விபரங்களை நான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். 1வது எதிரியிடமிருந்து நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கையில் கோழிவிளை ரஷாக், பீமாபள்ளியை சார்ந்த சசியிடம் வாங்கி தரும் கணேஷ் புகையிலை பாக்கெட்டுகளை வாங்கி கொண்டு தருமாறு கூறியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பீமாபள்ளியை சேர்ந்த ஷாஜி என்பவரிடமிருந்து வாங்கி வந்த புகையிலை என்று ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சசி

என்பவரிடம் ரூ.2,00,000/- கொடுத்து மீத பணம் ரூ.20,000/- வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது ஷாஜி என்பவரிடமிருந்து வாங்கியதாக கூறினேனா என்றால் சொல்லவில்லை. ரஷாக் போண் மூலமாக சுவாமியார்மடம் அருகில் தானும், சசியும் நிற்பதாக கூறி எதிரிகள் அங்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் ரஷாக்கும், சுனிலும் வரசொன்னதின் அடிப்படையில் எதிரிகள் இருவரும் வந்ததாக ஆய்வாளர் விசாரணையில் நான் கூறவில்லை. அத்தாட்சியில் சுனி, ரஷாக் ஆகியவர்களிடம் ஒப்படைக்க என்று அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ரஷாக், சசி ஆகியவர்களிடம் ஒப்படைக்க வரும் போது எதிரிகளை கைது செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சசி இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் ரஷாக் மற்றும் ஷாஜியை குற்றம் சொல்பவராக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து 10 நபர்களிடம் கேட்டேன். சாட்சிகளாக முன்வராதவர்கள் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை. ரஷாக் மற்றும் ஷாஜி ஆகியவர்களை வழக்கிலிருந்து நீக்கம் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் நீக்கம் செய்தோம் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எதிரிகளை நீக்கம் செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். புகையிலையை உட்கொண்டதால் யாருக்கும் தீங்கு ஏற்பட்டதாக குறிப்பிடவில்லை. 2,3 எதிரிகள் இளஞ்சிறார்களுக்கு விற்பனை செய்ததாக எவ்வித சங்கதியும் இடம்பெறவில்லை. எதிரிகளை சுவாமியார்மடம் ஆர்.சி.சர்ச் அருகே

வைத்து கைது செய்தேன். வாகனத்திலிருந்து வேறு யாரும் தப்பி சென்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை. நித்திரைவிளை - களியாக்காவிளையிலிருந்து சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சுவாமியார்மடம் - களியக்காவிளையிலிருந்து 15 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சுவாமியார்மடத்திலிருந்து - நித்திரைவிளை செல்ல பேரூந்துகள் உள்ளது என்றால் சரிதான். நாகர்கோவில் - திருவனந்தபுரம் சாலை கிழக்கிலிருந்து மேற்காக செல்கிறது என்றால் சரிதான்., சுவாமியார்மடத்திலிருந்து - வேர்கிளம்பி செல்லும் ரோடு வடக்கு பார்த்து செல்கிறது என்றால் சரிதான். சுவாமியார்மடத்திலிருந்து - வேர்கிளம்பி செல்லக்கூடிய சாலையில் சுமார் 200 மீட்டர் தொலைவில் சானல் செல்கிறது என்றால் சரிதான். சானலை ஓட்டி கிழக்கு பக்கம் நெடியான்கோடு செல்லக்கூடிய பாதை உள்ளது என்றால் சரிதான். அது மண்ரோடு என்றால் ஞாபகமில்லை. நெடியான்போடு செல்லக்கூடிய பாதையில் சுமார் 500 மீட்டர் கிழக்கு பக்கம் ஆர்.சி.சர்ச் உள்ளது என்றால் சரிதான். ஆர்.சி.சர்ச்-ல் சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் சிறப்பு தொழுகைகள் உண்டு என்றால் சரிதான். ரோந்து செல்ல அதிகாரிகள் முன்அனுமதி கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். காவல் ஆய்வாளர் ரோந்து செல்ல அதிகாரம் கொடுத்தார். வாய்மொழியான உத்தரவு தான் கொடுத்தார். ரோல்கால் காலை 07.00 மணிக்கு காவல்நிலையங்களில் நடக்கும். நாங்கள் இரு இருசக்கர வாகனங்களில் ரோந்து போனோம். வீயன்னூரிலிருந்து உள்சாலை வழியாக பிலாவிளை வழியாக சுவாமியார்மடம் வந்தோம் என்றால் சரிதான். வரும் வழியில் வீயன்னூரில் இரண்டு வாகனங்களிலும், அதை கடந்து

ஒரு வாகனத்தை தணிக்கை செய்தோம். சுவாமியார்மடம் ஆர்.சி.சர்ச் அருகே 10 வாகனங்களை தணிக்கை செய்தோம். அனைத்து வகையான வாகனங்களையும் தணிக்கை செய்தோம். சுவாமியார்மடத்திற்கு மேற்கே புலிப்பனம் என்ற பகுதி உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. இரு எதிரிகளும் திற்பரப்பு அருவிக்கு குளிக்க சென்ற போது நாங்கள் அவர்களை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றதால் ஆவணங்களை கேட்டு சண்டை போட்ட நபர்கள் மீது பொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. 2,3 எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**4வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

கோழிவிளையை சேர்ந்த ரஷாக்கை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சுவாமியார்மடத்திலிருந்து - கோழிவிளை 7 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். 4வது எதிரி வீட்டிற்கு சென்று நான் விசாரிக்கவில்லை. 1வது எதிரி சொன்னது போல் நித்திரைவிளையை சேர்ந்த சுனில் என்றால் சரியல்ல. 4வது எதிரி சுனிலை தேடி நாங்கள் நித்திரைவிளைக்கு செல்லவில்லை. சுனிலை எனக்குத் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 4வது எதிரிக்கும், வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.250/2023**

**Deposition of P.W.** 2

Name : திரு. டேவிட்ராஜ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 250

Dated:**01.04.2026**

**A1 to A4 Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது மார்த்தாண்டம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிய வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் பணியாற்றிய போது 15.10.2022ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. செந்தில் சுரேஷ், திரு. ராஜாங்க பெருமாள் ஆகியவர்கள் ரோந்து அலுவலாக சுவாமியார்மடம் ஆர்.சி.சர்ச் சந்திப்பில் வைத்து வாகன சோதனை செய்து கொண்டிருந்த போது KL 21 S 64 கிரே கலர் இன்னோவா வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்ட வாகனத்தில் ஓட்டுனர் மற்றும் அவருடன் வந்த இரண்டு நண்பர்களும் சந்தேகத்திற்கிடமாக பதில் கூறினார்கள். ஓட்டுனர்

அன்வர்தீன், மற்ற இருவர் ராஜாஉசேன், ஜோஜோ ஆவார்கள். வாகனத்தை சோதனை செய்த போது வெள்ளைநிற பாக்கெட்டில் 18 பண்டல்களில்



கணேஷ் புகையிலை இருந்தது மொத்த எடை 297 கிலோ ஆகும். நித்திரைவிளையை சர்ந்த சுனில் என்பவருக்கு கொண்டு வந்ததாக அன்வர்தீன் சொன்னார். ரஷாக் என்பவர் போண் மூலம் சுவாமியார்மடத்திற்கு வரசொன்னதாகவும் சொன்னார். புகையிலை பாக்கெட்டுகள் இன்னோவா வாகனம் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றும் போது சாடசியாக கையொப்பம் செய்தேன். பின்னர் எதிரிகள், வழக்குச் சொத்துகளுடன் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்

**<u>1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அன்றைய தினம் காலை 07.00 மணிக்கு பணிக்கு வந்தேன். ரோல்காலில் அரை மணிநேரம் இருந்து விட்டு ரோந்திற்கு சென்று விட்டேன். நான் எனது இருசக்கர வாகனத்தில் போனேன். திருவட்டாரிலிருந்து - பிலாங்காலை வழியாக சுவாமியார்மடத்திற்கு வந்தோம். திருவட்டாரிலிருந்து - சுவாமியார்மடம் வர 20 நிமிடங்கள் ஆகும். பிலாங்காலையில் வாகனதணிக்கை செய்து விட்டு சுவாமியார்மடம் வந்தோம். பிலாங்காலையில் 5 நிமிடம் வாகன தணிக்கை செய்தோம். நான் சொல்லக்கூடிய இடத்தில் நான் சொன்ன நேரத்தில் வாகன தணிக்கை செய்யவில்லை என்றால் சரியல்ல. ரஷாக் 2வது எதிரியை போண்மூலம் வரச்சொல்லியுள்ளார். ஆய்வாளர் விசாரணையில் நான் தொலைபேசி எண்ணை கூறவில்லை. ரஷாக் அன்பர்தீனை போண் மூலம் அழைத்தாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. புகையிலையை இளஞ்சிறார்களுக்கு

விற்பனை செய்ததை நான் பார்க்கவில்லை. நச்சுதன்மை கொண்ட புகையிலையை வெளிநபர்களுக்கு விற்பனை செய்ததை நான்



பார்க்கவில்லை. காவல்நிலையத்தில் வைத்து அத்தாட்சியில் கையொப்பம் செய்து விட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சுவாமியார்மடம் ஆர்.சி.சர்ச் நெடியாங்கோடு செல்லக்கூடிய மண்ரோட்டின் வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் நெடியாங்கோடு செல்லக்கூடிய மண்ரோட்டில் நின்று வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். அந்த சாலை நெடியாங்கோடு கிராமத்திற்கு மட்டும் செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். அந்த இடத்திலிருந்து சுமார் 500 மீட்டர் துாரத்தில் சுவாமியார்மடம் மற்றும் தேசீய நெடுஞ்சாலை ஆகியவை உள்ளது என்றால் சரிதான். பிலாங்காலை - வேர்கிளம்பியிலிருந்து - அழகியமண்டபம் செல்லக்கூடிய சாலையில் உள்ளது என்றால் சரிதான். பிலாங்காலையிலிருந்து எந்த வழியாக சுவாமியார்மடம் சென்றேன் என்று ஞாபகம் இல்லை. சுவாமியார்மடம் ஆர்.சி.சர்ச் அருகே இருசக்கர வாகனங்கள் மட்டும் தணிக்கை செய்தோம், எத்தனை வாகனங்கள் என்று ஞாபகமில்லை. அன்வர்தீன் அ.சா.1-யும் சொன்ன தகவலின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அன்வர்தீன் சொன்னதை அ.சா.1 எழுதினாரா என்று ஞாபகமில்லை. நான் சொன்னது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனிநபர்களில் எத்தனை பேரை கூப்பிட்டார் என்று

ஞாபகமில்லை. நான் நேரடியாக சம்பவத்தை பார்க்காததால் எனக்கு எதுவும் ஞாபகமில்லை என்றால் சரியல்ல.

**.4.**

**<u>4வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

4வது எதிரியை தேடி நான் அவர் வீட்டிற்கு செல்லவில்லை. 4வது எதிரியை பற்றிய விபரங்கள் தெரியாது என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.